வணக்கம்

ஆகாஷ்வாணி – புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 07-10-2026        நேரம் : மாலை 6.10 மணி

---

## தலைப்புச் செய்திகள்

- 2047ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக மேம்படும் இலக்கை, தொலைநோக்கு கொள்கைகள், மற்றும், கடின உழைப்பு மூலம், இந்தியா நிச்சயமாக எட்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை புதுடெல்லியில், 10ஆவது இண்டியா மொபைல் காங்கிரஸ் மாநாட்டை தொடக்கி வைக்கிறார்.
- ரிசர்வ் வங்கி, இதர வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடன்கள் மீதான ரெப்போ வட்டி விகிதம், 5.5 சதவிகிதமாக உயர்த்தப் பட்டுள்ளது.
- உலக பருத்தி தினமான இன்று, பருத்தி விவசாயிகள் உட்பட துறை சார்ந்த அனைவருக்கும், மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

------------------------------

## மோடி சங்கல்ப் 1 (16)

2047ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக மேம்படும் இலக்கை, தொலைநோக்கு கொள்கைகள், மற்றும், கடின உழைப்பு மூலம், இந்தியா நிச்சயமாக எட்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், விக்சித் சங்கல்ப சபா நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், ஒருகாலத்தில் கொள்கை முடக்குவாத நாடாக கருதப்பட்ட இந்தியா, தற்போது, வலுவிற்கும், நெகிழ்வுத் தன்மைக்கும் பெயர் பெற்ற நாடாக மேம்பட்டுள்ளதாக கூறினார். முன்பு இறக்குமதிக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப்பட்ட நிலையில், தற்போது ஏற்றுமதி துறையில் புதுப்புது இலக்குகளை இந்தியா தாண்டி வருவதாகவும், கடந்த 10 ஆண்டுகளில் இந்திய வேளாண் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, விடுதலைக்கு பின்னர் முன் எப்போதும் காணப்பட்ட தில்லை என்றும்

அவர் கூறினார். சரியான எண்ணமும், சரியான கொள்கைகளும் இருந்தால், எதுவுமே சாத்தியம்தான் என்பதற்கு, இம்மாற்றங்களே சான்றாகும் என்பதால், இந்தியாவின் வளர்ச்சிக்கு இன்னும் பெரிய இலக்குகளை நிர்ணயிக்க வேண்டிய தருணம், இது என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி மேலும் குறிப்பிட்டார்.

## மோடி சங்கல்ப் 2 (14)

(வாய்ஸ்)

25 ஆண்டுகளுக்கு முன்னர் இதே நாளில், குஜராத் முதலமைச்சராக தாம் பதவியேற்ற போது, இன்றைய மைல்கல் வரும் என தாம் எண்ணக் கூட இல்லை என்றும், தொடர்ச்சியாக 25 ஆண்டு மக்கள் சேவை என்ற சாதனைக்கு, மக்களின் ஆதரவும், ஆசிகளுமே காரணம் என்றும், பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார். இதற்கென, ஜனநாயக பற்றுடன் கூடிய அனைத்து மக்களுக்கும், பாரதீய ஜனதா கட்சி மற்றும் அரசியல் சகாக்களுக்கும் தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாக அவர் குறிப்பிட்டார். கடந்த 25 ஆண்டுகளாகத் தாம் ஈட்டியுள்ள, மக்களின் நம்பிக்கையும், மக்கள் சேவை அனுபவங்களுமே, தமது மிகப் பெரிய சொத்துக்கள் என்று திரு. நரேந்திர மோடி கூறினார். இன்று காலை விநாயகர் கோவிலுக்கு தாம் சென்று 140 கோடி இந்தியர்களுக்காக பிரார்த்தனை செய்து கொண்டதாகவும், அல்லும்-பகலும் தொடர்ந்து மக்களுக்கு சேவை புரிவதற்கான கூடுதல் ஆற்றலை அருள, எல்லாம் வல்ல இறைவனை தாம் வேண்டிக் கொண்டதாகவும், அவர் தெரிவித்தார்.

## மோடி சங்கல்ப் 3 (13)

பிரதமர் கலந்து கொண்ட விக்சித் பாரத் சங்கல்ப சபா நிகழ்ச்சியில், பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் பேசுகையில், மக்கள் சேவையே பிரதமர் திரு. நரேந்திர மோடியின் வாழ்க்கை குறிக்கோள் என்றும், மக்களுக்கு சேவை புரிவதற்கான கருவியாகவே அரசியலை அவர் காண்பதாகவும் கூறினார். நாட்டின் வளர்ச்சி, தன்னம்பிக்கை, மற்றும், சுய மரியாதையை

மேம்படுத்த, கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக திரு. நரேந்திர மோடி அயராது பாடுபட்டு வருவதாகவும், உலக அளவிலான பல சவால்களுக்கு இடையிலும், ஏழைகள், மற்றும், விளிம்பு நிலை மக்களின் நல மேம்பாட்டிற்கே, திரு. நரேந்திர மோடி முக்கியத்துவம் அளித்து வந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். பொது சேவையில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா உட்பட பல்வேறு மத்திய அமைச்சர்களும், வேறு பல தலைவர்களும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

-----------------------------

## மோடி வாழ்த்து (6)

பொது சேவையில், 25 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, உலகத் தலைவர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர். ஜப்பானிய பிரதமர் திருமதி சானே டக்காய்ச்சி, பெல்ஜியம் பிரதமர் திரு. பார்ட்-டி- வேவர், நைஜீரியா அதிபர் திரு. போலா அகமது டினிபு, பூட்டான் பிரதமர் திரு. ஷெரிங் டோப்கே, டொமினிக்கா பிரதமர் திரு. ரூஸ்வெல்ட் ஸ்கெர்ரிட் உள்ளிட்டோர் இதில் அடங்குவர்.

-----------------------------

## மோடி-மொபைல் (11)

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை புதுடெல்லி யஷோபூமியில், 10ஆவது இண்டியா மொபைல் காங்கிரஸ் மாநாட்டை முறைப்படி தொடக்கி வைக்கிறார். நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து, 600 ஸ்டார்ட்-அப் நிறுவனங்களும், 900 நிபுணர்கள் மற்றும் 500 கண்காட்சியாளர்களும், இந்த 4 நாள் நிகழ்வில் பங்கேற்கிறார்கள். எல்லையற்ற வளர்ச்சி என்ற கருப்பொருள் அடிப்படையில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள இம்மாநாடு, தொலைத் தொடர்பு, டிஜிட்டல் வசதிகள், மற்றும், தொழில்நுட்ப புதுமைகளில், இந்தியா எட்டியுள்ள முன்னேற்றத்தை உலகிற்கு எடுத்துக்காட்டும் மேடையாகவும், இதர

நாடுகளுடன், ஒத்துழைப்பு, முதலீடு, மற்றும், அறிவுப் பரிமாற்ற ஒப்பந்தங்களை எட்டுவதற்கான களமாகவும் அமைகிறது.

-----------------------------

## ரிசர்வ் வங்கி (12)

ரிசர்வ் வங்கி, இதர வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடன்கள் மீதான ரெப்போ வட்டி விகிதம், 5.5 சதவிகிதமாக, 25 அடிப்படைப் புள்ளிகள் அளவிற்கு உயர்த்தப் பட்டுள்ளது. ரிசர்வ் வங்கியின் பிரதான வட்டி விகிதம் உயர்த்தப்படுவது, சுமார் மூன்றரை ஆண்டு இடைவெளிக்கு பின்னர் இதுவே முதல் முறையாகும். உலக அளவிலான புவி-அரசியல் காரணங்களால், பணவீக்கம் அதிகரித்து வருவதை கட்டுப்படுத்தும் வகையில், ரிசர்வ் வங்கியின் பணக் கொள்கைக் குழு, ஏகமனதாக இம்முடிவை மேற்கொண்டுள்ளது. ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா செய்தியாளர்களிடம் இதை தெரிவித்தார். நடப்பு நிதியாண்டில் இந்திய பொருளாதாரம், 7.1 சதவிகிதம் வளர்ச்சி அடையும் என்றும், ரிசர்வ் வங்கி கணிப்பு வெளியிட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் பணவீக்கம் குறித்த ரிசர்வ் வங்கியின் கணிப்பு, 5.2 சதவிகிதமாக உயர்த்தப் பட்டுள்ளது.

-----------------------------

## பருத்தி தினம் (13)

உலக பருத்தி தினமான இன்று, பருத்தி விவசாயிகள் உட்பட துறை சார்ந்த அனைவருக்கும், மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார். நாட்டில் 60 லட்சம் விவசாயிகள், பருத்தி சாகுபடியில் ஈடுபட்டுள்ளதாகவும், வயலில் இவர்கள் விளைவிக்கும் பருத்தியே, நூற்பாலை, நெசவாலை, ஆடை உற்பத்தியாலை உட்பட, ஜவுளித் துறையின் பொருள் வினியோக சங்கிலி முழுவதிலும், கோடிக் கணக்கிலான மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி வருவதாகவும், வீடியோ செய்தி ஒன்றில் அவர் கூறியுள்ளார். பருத்தி அடிப்படையிலான, பல கோடி கைத்தறி விவசாயிகள், தற்போது ஏற்றுமதி துறையிலும் முன்னேறி

வருவதை அமைச்சர் சுட்டிக் காட்டி பாராட்டினார். உலக அளவில், பருத்தியின் சமூக-பொருளாதார, மற்றும், சுற்றுச் சூழல் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில், ஆண்டுதோறும் அக்டோபர் 7ஆம் தேதி, உலக பருத்தி தினமாக கடைபிடிக்கப் படுகிறது.

------------------------------

## மக்கள் சேவை மூலமான தேச சேவை - 1 (13)

மக்கள் சேவை மூலமான தேச சேவை என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், பொது சேவையில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் சேவைப் பயணம், இன்று வரை அயராத உறுதிப்பாட்டுடன் தொடர்கிறது. சேவை மற்றும் நல்லாட்சி என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப, 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை நோக்கி, நாடு தொடர்ச்சியாக பயணித்து வருகிறது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி - அனைவருக்கும் சமூக அதிகாரம் என்னும் அரசின் கொள்கையினால், நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அயோத்தியில் ராமர் கோவில் கட்டப் பட்டதால், நாட்டில், தொன்மையான கலாச்சார மரபுகள் குறித்து, மறுமலர்ச்சி ஏற்பட்டு இருப்பது குறித்து, இன்று, சேவா சங்கல்ப் அபியான் என்னும், இந்த சிறப்பு தொடரில் காண்போம்...

(வாய்ஸ்)

## மக்கள் சேவை மூலமான தேச சேவை 2 (17)

(வாய்ஸ்)

அயோத்தியில் ராமர் அவதரித்த பூமியை மீட்க, 5 நூற்றாண்டுகளாக இந்துக்கள் காத்திருந்தனர். ராமஜென்ம பூமி, நாட்டின் எத்தனையோ இடங்களில் ஒன்றாக ஒருபோதும் இருந்ததில்லை. மாறாக, பலகோடி மக்களின் நம்பிக்கை மையமாகவே திகழும் ராமஜென்ம பூமியில், கோவில் கட்டப்படும் என்ற வாக்குறுதி, நீண்டகாலமாக நீடித்த நிலையிலும், பல தலைமுறைகள், இக்கனவு நனவாவதை காணாமலேயே மடிந்து போயின. நீதிமன்றத்தில் இதுகுறித்த வழக்கு, 70 ஆண்டுகளாக நிலுவையிலேயே

இருந்தது. இந்த சிக்கலுக்கு தீர்வு காணும் வகையில், அரசு, வாக்குவாதம் புரிவதை விடுத்து, அடிப்படை சூழலை தயார்ப்படுத்தும் அணுகுமுறையை மேற்கொண்டது. நீதிமன்ற தீர்ப்பை அனைவரும் ஏற்க வேண்டும் என்றும், வன்முறைகளை தவிர்த்து, அமைதியை பராமரிக்க வேண்டும் என்றும், தொடர்ந்து வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

2019ஆம் ஆண்டு நவம்பரில், நீதிமன்றம், சம்பந்தப்பட்ட நிலத்தை, கோவில் கட்டுமானத்திற்கு ஒதுக்கி, ஏகமனதாக தீர்ப்பு வெளியிட்ட போது, அனைவரும் அதை அமைதியாக ஏற்றுக் கொண்டதைக் கண்டு, ஒவ்வொருவரும் வியப்படைந்தனர். தீர்ப்பை தொடர்ந்து வன்முறை எதுவும் இல்லாத நிலையில், அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவதற்கான

## மக்கள் சேவை மூலமான தேச சேவை 3 (5)

பிராண பிரதிஷ்டை, 2024 ஜனவரி 24ஆம் தேதி நடைபெற்றது. கட்டுமான பணிகள் முழுமையாக நிறைவடைந்து, 2025 நவம்பரில், கொடியேற்ற வைபவம் நடத்தப்பட்டது.

இந்திய கலாச்சாரம், 500 ஆண்டுகளுக்கு பின்னர், புண்ணிய பூமியான அயோத்தியில் உறைவிடம் கண்டுள்ளது என்றால், அது மிகையல்ல.

------------------------------

## தட்டாஞ்சாவடி (10)

புதுச்சேரியில் நேற்று நடைபெற்ற தட்டாஞ்சாவடி சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலில், 80.81 சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ளன. ஏற்கனவே நடந்து முடிந்த சட்டப் பேரவை தேர்தலின் போது இத்தொகுதியில் பதிவான வாக்குப்பதிவு விகிதத்தை விட, இது 6.29 சதவிவிகிதம் குறைவாகும். நேற்றைய வாக்குப் பதிவின் போது பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், சீல் வைக்கப்பட்டு, வாக்கு எண்ணிக்கை மையமான மோதிலால் நேரு அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் உள்ள வலுவறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. வாக்கு எண்ணும் மையத்தில், 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. வாக்கு எண்ணிக்கை வரும் 9ஆம் தேதி நடைபெறும்.

------------------------------

## காரைக்கால் நகராட்சி (7)

காரைக்காலில், மருத்துவமனைகள், மருந்தகங்கள், மற்றும், பரிசோதனை மையங்கள், மருத்துவக் கழிவுகளை, பொது இடங்கள், மற்றும், நீர் நிலைகளில் கொட்டினால், தொழில் உரிமம் ரத்து செய்யப்படும் என, நகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது. மருத்துவக் கழிவுகளை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடம் மட்டுமே வழங்கி, அதற்கான உரிமங்களை கையில் வைத்து இருக்க வேண்டும் என்று, நகராட்சி ஆணையர் உத்தரவிட்டுள்ளார்.

------------------------------

## வானிலை (13)

இன்று, கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், நெல்லை-தூத்துக்குடி மாவட்டங்களின் கடலோரப் பகுதிகள், மற்றும், நீலகிரி-குமரி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தேனி, தென்காசி, மதுரை, திண்டுக்கல், தஞ்சை, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை உள்ளிட்ட மாவட்டங்கள், மற்றும், காரைக்கால் பகுதியில், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், தமிழகத்தின் இதர பகுதிகள், மற்றும், புதுச்சேரியில், லேசான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும 13ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் பில்லூர் அணையில், 12 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

------------------------------

## ஏனாம் (10)

சத்தீஸ்கர் மாநிலம் பிலாயில் நடைபெற்ற, 45ஆவது தேசிய சப்-ஜூனியர் பால் பேட்மிண்டன் போட்டித் தொடரில், புதுச்சேரி, 3 பதக்கங்களை வென்றுள்ளது. கலப்பு இரட்டையர் பிரிவில், தங்கப் பதக்கமும், மகளிர் பிரிவில் வெள்ளி, மற்றும், ஆடவர் பிரிவில் வெண்கலப் பதக்கமும் புதுச்சேரிக்கு கிடைத்துள்ளன. இப்போட்டிகளில், புதுச்சேரி சார்பில் 20 வீரர்-வீராங்கனைகள் பங்கேற்றதாகவும், இவர்களில், புதுச்சேரி வீரர் டி. சாஸ்திரி, ஏனாமைச் சேர்ந்த சிவபிரசாத் ஆகியோர், சிறந்த வீரர் விருதுகளை வென்றுள்ளனர். ஏனாம் பால் பேட்மிண்டன் சங்கத்தின் செயலர் திரு. சேஷு சுமன், இன்று ஏனாமில் செய்தியாளர்களிடம் இத்தகவல்களை தெரிவித்தார்.

-----------------------------

## இந்தியா ஒலிம்பிக் (11)

2036ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை இந்தியாவில் நடத்துவதற்கான இந்தியாவின் கோரிக்கை மனு, இம்மாத இறுதியில், இதுதொடர்பான அதிகார குழுவிடம் சமர்பிக்கப்படும் என, சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தெரிவித்துள்ளது. மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் பி.டி. உஷா ஆகியோர், இத்தகவலை வெளியிட்டுள்ளனர். 2036ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடத்த, இந்தியா, ஜெர்மனி, கத்தார், துருக்கி, ஹங்கேரி, தென்கொரியா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளிடம், சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி, ஏற்கனவே விருப்ப மனுக்களை கேட்டுப் பெற்றுள்ளது. இதுகுறித்த இறுதி முடிவு, சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் 2029ஆம் ஆண்டு அமர்வில், வாக்கெடுப்பு மூலம் மேற்கொள்ளப்படும்.

-----------------------------